# லீவுகள்

உங்கள் வேலைக்கு பாதிப்பற்ற, சம்பளமற்ற, கீழ்க்காணப்படும் லீவுகள் எடுப்பதற்கு உங்களிற்கு உரிமை உண்டு:

## சுகயீனலீவு

உங்களது சுகவீனம், காயம் மற்றும் மருத்துவ ரீதியான அவசர தேவைகளிற்கு நீங்கள் 3 நாட்கள் சுகயீனலீவு எடுக்க முடியும்.

## துக்கதின லீவு

குடும்ப உறுப்பினர் ஒருவரின் மரணத்திற்கு 2 நாட்கள் லீவு எடுக்க முடியும்.

## குடும்பம் சார்ந்த லீவு

குடும்ப அங்கத்தவர்களின் சுகயீனம், காயம் மற்றும் மருத்துவ அவசரம் அல்லது அவசரதேவைகளிற்காகழு 3 நாட்கள் லீவு எடுக்கமுடியும்.

உங்கள் குடும்ப அங்கத்தவராக பின்வருபவர்கள் கருதப்படுவார்கள்.

- உங்கள் கணவர் அல்லது மனைவி (அதேபாலினத்தவரை அல்லது எதிர்பாலினத்தவரை திருமணம் முடித்தவர்கள்)
- உங்களது பிள்ளை அல்லது உங்களது துணையின் பிள்ளை, வளர்ப்புக் குழந்தை, உங்கள் பெற்றோர், உங்களது தாய் அல்லது தந்தையின் அடுத்த துணையாக வந்த பெற்றோர் முறையானவர், வளர்ப்புப் பெற்றோர், அப்பா-அம்மாவினுடைய பெற்றோர், உங்கள் தாய் அல்லது தந்தையின் இன்னோர் துணையின் பெற்றோர், பேரக்குழந்தை, உங்கள் துணையின் பேரக்குழந்தை
- உங்களது அண்ணன்-தம்பி அல்லது அக்கா - தங்கை
- உங்களது பிள்ளையின் கணவர்-மனைவி
- உங்களது பராமரிப்பில் அல்லது உதவியில் தங்கியுள்ள உறவினர் ஒருவர்

*அவசர தேவை (urgent matter) என்பது ஒரு சம்பவம். ஏற்கனவே திட்டமிடப்படாததாகவும் அல்லது உங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதானதும் அதேவேளையில் பாராதுரமான தாக்கங்களை அல்லது உடனடியாக காரியம் ஆற்றப்படாதவிடத்து உணர்வு பூர்வமான தாக்கமொன்றினையும் ஏற்படுத்தக் கூடியது. உதாரணமாக உங்கள் குழந்தை பராமரிப்பாளர் (baby sitter) தனது சுகயீனம் காரணமாக அன்றைய தின பராமரிப்பினை இரத்துச் செய்தல் அல்லது உங்களது வயதான பெற்றோருக்கான ஓர் அவசர தேவை.

நீங்கள் இந்த லீவுகளை எடுப்பதற்கு, ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் அத்தாட்சியினைத் தரும்படி உங்களது முதலாளி உங்களைக் கேட்க முடியும். இந்த லீவினை எடுக்க வேண்டிய ஒரு தேவை ஏற்படுமிடத்து நீங்கள் உங்கள் முதலாளிக்கு எவ்வளவு விரைவில் அறிவிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் அறிவித்தல் வேண்டும். அது தொலைபேசி மூலமாக இருக்கலாம். எழுத்தில் தான் இருக்க வேண்டும் என்பது இல்லை.இந்த லீவுகள் எவற்றையேனும் எடுப்பதாக இருப்பின் ஒரே முதலாளிக்குக்கீழ் ஆகக்குறைந்தது 2 கிழமைகளாவது வேலை செய்திருக்க வேண்டும்.

## வீட்டு குடும்ப வன்முறை அல்லது பாலியல் வன்முறைக்கான லீவு

வீட்டு - குடும்ப வன்முறை அல்லது பாலியல் வன்முறைக்கு நீங்கள் அல்லது உங்களது பிள்ளை முகங்கொடுக்கும் போது 10 தனிப்பட்ட நாட்கள் லீவினையும் 15 கிழமைகள் வரையான லீவினையும் பெற முடியும். ஒவ்வொரு கலண்டர் வருடமும் முதல் 5 நாட்கள் சம்பளத்துடன் கூடியதாக இருக்கும். மிகுதி நாட்கள் சம்பளமற்றவை.

குடும்ப அல்லது பாலியல் வன்முறை நடந்ததை நிரூபிக்க ஏற்றதான ஓர் நியாயமான ஆதாரத்தினை வழங்குமாறு கேட்பதற்கு தொழில் தருநர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. உங்களது தொழில்தருநரிடம் தொடர்ந்தேர்ச்சியாக 13 கிழமைகள் வேலையாற்றியிருந்தால், இந்த லீவுக்கு நீங்கள் தகதியடைவிர்கள்.

## லீவில் நிற்கும் போது தொழில்காப்புறுதி (EI) மூலமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல்

சில லீவுகளுக்கு நீங்கள் மத்திய அரசாங்கத்தினூடான தொழில்காப்புறுதியினைப் (EI) பெறக்கூடியதாக இருக்கும். தொழில்காப்புறுதி மூலமான நன்மைகளைப் பெறுவதற்கான விதிமுறைகள் ஒவ்வொரு லீவினைப் பொறுத்தும் வேறுபடும். தொழில்காப்புறுதி நன்மைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு அவர்களது விசாரணை தொலைபேசி எண் 1-800-206-7218 மூலம் அல்லது அவர்களது இணையத்தளம் www.canada.ca/en/services/benefits/ei.html. மூலம் அறிந்து கொள்ளலாம்.

Workers' Action Centre
416-531-0778
இலவச கட்டண தொலைபேசி: 1-855-531-0778
www.workersactioncentre.org



March 2019

# லீவுகள்

**சுகயீன லீவு தொழில்காப்புறுதி:**

சுகயீனம் அல்லது காயம் காரணமாக உங்களுக்கு வேலைக்கு சமூகமளிக்க முடியாதிருப்பின் இக்காப்புறுதிக்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியும்.

**பிரசவம் மற்றும் பெற்றோர் குழந்தை பராமரிப்பிற்கான தொழில்காப்புறுதி:**

நீங்கள் கர்ப்பிணயாக இருக்கும் காலத்தில் அல்லது குழந்தையொன்றினைப் பெற்றெடுத்த புதிய பெற்றோராக இருக்குமிடத்து.

**குடும்ப அங்கத்தவர்களைப் பராமரிப்பதற்கான தொழில்காப்புறுதி:**

- குடும்ப பராமரிப்பிற்காக வழங்கும் விடுப்பு: கடுமையான மருத்துவ நிலையினை அடைந்துள்ள குடும்ப அங்கத்தவரை பராமரிப்பதற்காக எடுக்கப்படும் லீவிற்கு இந்த காப்புறுதிக்கு விண்ணப்பிக்கலாம்.
- குடும்ப மருத்துவ லீவு: குடும்ப அங்கத்தவர் ஒருவர் 26 கிமைக்குள் மரணமடையலாம் என்ற கடுமையான ஒரு மருத்துவ நிலைக்கு ஆளாகியிருப்பின், நீங்கள் மத்திய அரசாங்க தொழில் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் கருணைமிக்க பராமரிப்பு தொழில்காப்புறுதிக்கு தகுதி பெறலாம்.
- கடும் சுகயீன லீவு: குடும்பத்தில் கடும் சுகயீனமுற்றுள்ள பிள்ளை அல்லது அங்கத்துவர் ஒருவரின் தொடர்பில் எடுக்கப்படும் லீவிற்கும் இத்தொழில் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பாகவும் ஏனைய லீவுகள் தொடர்பாகவும் மேலதிக விபரங்களுக்கு தொழில் அமைச்சின் இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

http://www.ontario.ca/document/your-guide-employment-standards-act-O.

## உங்கள் பாதுகாப்பிற்காக!

மேற்கூறப்பட்ட லீவுகளை நீங்கள் எடுப்பதினால் அல்லது எடுக்கத் திட்டமிட்டால் உங்கள் முதலாளி உங்களை பயமுறுத்தவோ, வேலையிலிருந்து நீக்கவோ அல்லது தண்டனைக்குள்ளாக்கவோ முடியாது. நீங்கள் விடுப்பில் சென்று வேலைக்குத் திரும்பும் பட்சத்தில் உங்களிற்கு உங்களது பழைய வேலை ஒரே மாதிரியாக வழங்கப்படல் வேண்டும் அல்லது அந்தப் பழைய வேலை இல்லாத பட்சத்தில் அதே மாதிரியான வேலை அதே அளவு சம்பளத்துடன் வழங்கப்படல் வேண்டும்.

லீவு எடுத்ததினால் நீங்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பின் அல்லது உங்களது உரிமைகள் மீறப்பட்டிருப்பின் சகல தகவல்களையும் எழுதி வைத்துக் கொண்டு, எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். சகல தொலைபேசி அழைப்புகளும் இலவசம் அத்துடன் இரகசியம் பேணப்படும்.



Workers' Action Centre
416-531-0778
இலவச கட்டண தொலைபேசி: 1-855-531-0778
www.workersactioncentre.org